ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2302/23 - 2022 ඔක්තෝබර් මස 20 වැනි බ්‍රහස්පතින්දා - 2022.10.20

*2302/23 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 20 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்

*ச.வ.பி. 4/2003*

**2002 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, நலன்புரி அனுகூலங்கள் சட்டம்**

*2002 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, நலன்புரி அனுகூலங்கள் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவு, 8, 10, 11 மற்றும் 12 ஆகிய பிரிவுகளுடனும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரையுடனும் சேர்த்து வாசிக்கப்படுவதாகிய அச்சட்டத்தின் 27 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**ரணில் விக்கிரமசிங்க,**
*சனாதிபதி.*

கொழும்பு,
*2022, ஒற்றோபர் 19.*

**ஒழுங்குவிதிகள்**

1. ஒவ்வொழுங்குவிதிகள், 2022 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, நலன்புரி அனுகூலக் கொடுப்பனவு (கொடுப்பனவுகளைப் பெறுவதற்கு தகவுடையவர்களாகவுள்ள ஆட்களை தெரிவு செய்தல்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

**பாகம் I**

**பொது**

2. (1) ஆணையாளர், இதற்கான அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்ட தெரிவுக்கான கட்டளைகளின் கீழ் நலன்புரி அனுகூலக் கொடுப்பனவுகளுக்காக விண்ணப்பிப்பதற்கு ஆளொருவரைக் கோரி சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் வெளியிடப்படும் ஆகக்குறைந்தது இரண்டு நாளாந்த செய்தித்தாள்களில் அறிவித்தலொன்றை வெளியிடுதல் வேண்டும்.

(2) ஓராம் உப ஒழுங்குவிதியில் குறிப்பீடு செய்யப்பட்ட அறிவித்தல் பின்வருவனவற்றைக் குறித்துரைத்தல் வேண்டும் –

(அ) நலன்புரி அனுகூலக் கொடுப்பனவுகளுக்கு விண்ணப்பிப்பதற்கு தகவுடையவர்களாகவுள்ள ஆட்கள்;
(ஆ) நலன்புரி அனுகூலக் கொடுப்பனவுகளுக்கான விண்ணப்பமொன்றைச் செய்யும் முறை;
(இ) விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதற்கான காலப்பகுதி.

(3) சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி ஒவ்வொரு விண்ணப்பத்துடனும் வெளிப்படுத்துகையொன்று சேர்த்தனுப்பப்படுதல் வேண்டும்.

(4) மூன்றாம் உப ஒழுங்குவிதியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஒவ்வொரு வெளிப்படுத்துகையும் –

(அ) விண்ணப்பதாரரினால் கையொப்பமிடப்பட்டும்; அத்துடன்
(ஆ) இதற்கான அட்டவணை II இல் தரப்பட்ட படிவத்திலும்,

(இதனகத்துப் பின்னர் "விண்ணப்பதாரர்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) நலன்புரி அனுகூலக் கொடுப்பனவுக்கு விண்ணப்பிக்கும் ஆள் வசிக்கின்ற இடப்பரப்பின் இயைபான பிரதேச செயலாளருக்கு செய்யப்படுதல் வேண்டும்:

ஆயின், ஏதேனும் இயலாமை காரணமாக வெளிப்படுத்துகையொன்றைச் செய்வதற்கு இயலாதவராகவுள்ள விண்ணப்பதாரர் ஒருவரின் விடயத்தில், அவ்விண்ணப்பதாரர் சார்பில் அத்தகைய விண்ணப்பதாரரின் குடும்ப உறுப்பினர் ஒருவர் அல்லது வேறோர் ஆள் வெளிப்படுத்துகையொன்றைச் செய்யலாம்.

(5) மூன்றாம் உப ஒழுங்குவிதியில் குறிப்பீடு செய்யப்பட்ட வெளிப்படுத்துகை, அத்தகைய ஆள் சட்டத்தின்கீழ் நலன்புரி அனுகூலக் கொடுப்பனவொன்றுக்கு தகவுடையவராகவுள்ளாரா என நிச்சயிக்கும் நோக்கத்துக்காக நியமிக்கப்பட்ட தெரிவுக்குழுவினால் கவனத்திற்கொள்ளப்படுதல் வேண்டும்.

3. இவ்வொழுங்குவிதிகளின் நோக்கங்களுக்காக, ஒவ்வொரு பிரதேச செயலாளரும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக 2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் நியதிகளின்படி 2 ஆம் ஒழுங்குவிதியின் (3) ஆம் உப ஒழுங்குவிதியில் குறிப்பீடு செய்யப்பட்ட வெளிப்படுத்துகையில் கொடுத்துதவப்பட்ட தகவல்களை இலத்திரனியல் ஆவணங்கள் மற்றும் இலத்திரனியல் பதிவேடுகள் என்ற வடிவத்தில் வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

## பாகம் II

### நலன்புரி பயனுகரி தகவல் முறைமையைத் தாபித்தல்

4. (1) சபையானது, சபையின் ஆணையாளரிடம் அமைந்திருக்கும் நலன்புரி பயனுகரி தகவல் முறைமையொன்றை இலத்திரனியல் ரீதியிலும் வேறுவகையாகவும் தாபித்துப் பேணுதல் வேண்டும்.

(2) சபையானது, ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவு தொடர்பான நலன்புரி பயனுகரித் தகவலைப் பேணும் நோக்கத்ததுக்காக அத்தகைய பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலகத்தில் அமைந்திருக்க வேண்டிய நலன்புரி பயனுகரி தகவல் அலகு எனவழைக்கப்படும் அலகொன்றைத் தாபித்தல் வேண்டும்.

(3) ஒவ்வொரு நலன்புரி பயனுகரி தகவல் அலகும், இலத்திரனியல் ஆவணங்கள் மற்றும் இலத்திரனியல் பதிவேடுகள் சார்பில் 2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் நியதிகளின்படி அவ் இலத்திரனியல் ஆவணங்கள் மற்றும் இலத்திரனியல் பதிவேடுகள் என்ற வகையாக நலன்புரி பயனுகரி தகவலைப் பேணுதல் வேண்டும்.

(4) ஒவ்வொரு நலன்புரி பயனுகரி தகவல் அலகும் சபையின் ஆணையாளரிடம் அமைந்திருக்கும் (1) ஆம் உப ஒழுங்குவிதியில் குறிப்பீடு செய்யப்பட்ட நலன்புரி பயனுகரி தகவல் முறைமைக்கு தொடர்புபடுத்தப்படுதல் வேண்டும்.

(5) சபையானது, ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவின் ஒவ்வொரு பிரதேச செயலகத்திலும் அமையப்பெற்றுள்ள நலன்புரி பயனுகரி தகவல் அலகைப் பேணுவதற்கு அப்பிரதேச செயலகத்துக்கு, சட்டத்தின் 6 ஆம் பிரிவின் கீழ் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்களை நியமித்தல் வேண்டும்.

(6) ஓராம் உப ஒழுங்குவிதியில் குறிப்பீடு செய்யப்பட்ட தகவல் முறைமை பத்து ஆண்டுகாலப் பகுதிக்கு பேணிக் காக்கப்படுதல் வேண்டும்.

## பாகம் III

### தெரிவுக்குழுக்களின் நியமனம், தத்துவங்கள் மற்றும் பணிகள்

5. (1) சபையானது, ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுக்கும் அவசியமாகக் கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினவான தெரிவுக் குழுக்களை நியமித்தல் வேண்டும்.

(2) தெரிவுக்குழுவொன்று 2 ஆம் ஒழுங்குவிதியின் (3) ஆம் உப ஒழுங்குவிதியில் குறிப்பீடு செய்யப்பட்ட வெளிப்படுத்துகையின் செம்மையைப் பரிசோதனை செய்தலும் நிச்சயித்தலும் வேண்டும்.

(3) ஒவ்வொரு தெரிவுக்குழுவும் பின்வருவோரைக் கொண்ட மூன்று ஆட்களைக் கொண்டிருத்தல் வேண்டும் –

(அ) இயைபான பிரதேச செயலாளர் பிரிவின் இயைபான பிரதேச செயலகத்துக்கு இணைக்கப்பட்டுள்ள உதவி பிரதேச செயலாளர் அல்லது உதவிப்பணிப்பாளர் (திட்டமிடல்) அல்லது கணக்காளர்; அவர் தெரிவுக்குழுவின் தவிசாளராகவிருத்தல் வேண்டும்;

(ஆ) இயைபான பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலகத்திற்கு இணைக்கப்பட்டுள்ள ஒரு சமூக சேவை அலுவலர், சமுர்த்தி முகாமையாளர், நிருவாக கிராம அலுவலர் அல்லது நிருவாக அலுவலர்; அத்துடன்

(இ) (இதனகத்துப்பின்னர் "எண்ணீட்டாளர்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இயைபான பிரதேச செயலாளர் பிரிவினுள் இவ்வொழுங்குவிதிகளின் நோக்கங்களுக்காக விண்ணப்பதாரர்களின் தரவுகளை சேகரிக்கும், வைத்திருக்கும் மற்றும் தேக்கிவைக்கும் கடமையைப் புரியும் பகிரங்க அலுவலர் ஒருவர்.

(4) தெரிவுக்குழுவின் உறுப்பினர்கள், இறப்பின் மூலம், பதவியிலிருந்து அகற்றப்படுவதன் மூலம் அல்லது வேறு வகையாக முன்னரே பதவியை வறிதாக்கினாலொழிய, பதவிக்கு நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து ஓராண்டு காலத்துக்கு அத்தகைய பதவியை வகித்தல் வேண்டும் மீள் நியமிக்கப்படுவதற்கு தகவுடையவர்களாதலும் வேண்டும்.

(5) உறுப்பினரெருவர், பதவிவிலகுகை அல்லது இடமாற்றம் காரணமாக குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்கு பதவி வகிக்க இயலாதவராகவிருக்கின்றவிடத்து, வேறோர் உறுப்பினர், அவர் எந்த உறுப்பினரை அடுத்துறுகின்றாரோ அந்த உறுப்பினரின் பதவிக்காலத்தின் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்கு பதவிவகிப்பதற்கு நியமிக்கப்படுதல் வேண்டும்.

(6) பொதுத் திறைசேரியின் முன்னங்கீகாரத்துடன் சபையினால் அத்தகைய படிகள் தெரிவுக்குழுவின் உறுப்பினர்களுக்கு செலுத்தப்படுதல் வேண்டும்.

(7) தெரிவுக்குழுவின் எவரேனும் உறுப்பினர் குறித்தளிக்கப்பட்ட காரணங்களுக்காக சபையின் அறிவுறுத்தலின் கீழ் இயைபான பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளரினால் பதவியிலிருந்து அகற்றப்படலாம்.

(8) எண்ணீட்டாளர், சட்டத்தின் நோக்கத்துக்காக, அவசியமாகக் கூயவாறாக வெளிப்படுத்துகையில் வழங்கப்பட்ட தகவல்களின் செம்மையை பரீட்சிப்பதற்கும் நிச்சயிப்பதற்கும் விண்ணப்பதாரரின் வதிவிடத்துக்கு விஜயம் செய்தல் வேண்டும்.

(9) தெரிவுக்குழுவின் உறுப்பினர்கள், சட்டத்தின் 10 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி விண்ணப்பதாரர்களின் வெளிப்படுத்துகைகளில் வழங்கப்பட்ட தகவல்களின் செம்மையை பரீட்சித்தலும் நிச்சயித்தலும் வேண்டும் என்பதுடன் அவர்களின் அபிப்பிராயப்படி நலன்புரி அனுகூலக் கொடுப்பனவுகளைப் பெறுவதற்கு தகவுடையோராகவிருக்க வேண்டிய விண்ணப்பதாரர்களின் பெயர்கள் அடங்கிய நிரல் ஒன்றை இயைபான பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளரின் புறக்குறிப்புடன் சபைக்கு அனுப்பி வைத்தலும் வேண்டும்.

(10) ஒன்பதாம் உப ஒழுங்குவிதியில் குறிப்பீடு செய்யப்பட்ட பெயர்களின் நிரல் ஆணையாளரினால் பெறப்படுவதன்மேல், அவர் நலன்புரி அனுகூலக் கொடுப்பனவுகளைப் பெறுவதற்கு தகவுடையவர்களாகவுள்ள விண்ணப்பதாரர்களை தெரிவுசெய்வதற்கு சபைக்கு அத்தகைய பெயர்களின் நிரலை ஆற்றுப்படுத்துதல் வேண்டுமென்பதுடன் சட்டத்தின் 11 ஆம் பிரிவின் நியதிகளின்படி தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களின் நிரலொன்று அடங்கிய அறிவித்தலொன்றை வெளியிடுதலும் வேண்டும்.

## பாகம் IV

### மேன்முறையீட்டுக் குழு

6\. (1) சபையானது, ஒவ்வொரு நிருவாக மாவட்டத்துக்கும் அத்தகைய எண்ணிக்கையினவான மேன்முறையீட்டுக் குழுக்களை நியமித்தல் வேண்டும்.

(2) சபையானது, இயைபான நிருவாக மாவட்டத்தின் மாவட்டச் செயலாளரின் மதியுரையின் மீது ஒவ்வொரு நிருவாக மாவட்டத்துக்கும் தேவைப்படும் மேன்முறையீட்டுக் குழுக்களின் எண்ணிக்கையை தீர்மானித்தல் வேண்டும்.

(3) ஒவ்வொரு மேன்முறையீட்டுக் குழுவும் பின்வருமாறு ஐந்து உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) எந்த பிரதேச செயலாளர் பிரிவு அல்லது பிரிவுகள் தொடர்பில் மேன்முறையீட்டுக்குழு நியமிக்கப்படுகின்றதோ அந்த பிரதேச செயலாளர் பிரிவு அல்லது பிரிவுகள் தவிர்ந்த பிரதேச செயலாளர் பிரிவு ஒன்றுக்கு குறித்தளிக்கப்பட்ட பிரதேச செயலாளர் ஒருவர்;

(ஆ) இயைபான நிருவாக மாவட்டத்தின் பிரதேச செயலகத்துக்கு இணைக்கப்பட்ட இரண்டு பகிரங்க அலுவலர்கள்; அத்துடன்

(இ) இயைபான பிரதேச செயலாளர் பிரிவினுள் நலன்புரி அனுகூல செயற்பாடுகளில் முனைப்பாக ஈடுபடும் அரசசார்பற்ற ஒழுங்கமைப்புகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இரண்டு ஆட்கள்.

(4) மேன்முறையீட்டுக் குழுவின் எவரேனும் உறுப்பினர், மாவட்ட செயலாளரின் மதியுரையின் மீது சபையினால் பதவியிலிருந்து எந்நேரத்திலும் அகற்றப்படலாம்.

(5) தவிசாளருக்கும் மேன்முறையீட்டுக் குழுவின் உறுப்பினர்களுக்கும், பொதுத் திறைசேரியின் முன்னங்கீகாரத்துடன் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய வீதங்களிலும் ஊதியமளிக்கப்படுதல் வேண்டும்.

(6) நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர், பதவி விலகுகை அல்லது இடமாற்றம் காரணமாக குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்கு பதவி வகிக்க இயாலாதவராகவிருக்கின்றவிடத்து, வேறோர் உறுப்பினர், அவர் எந்த உறுப்பினரை அடுத்துறுகின்றாரோ அந்த உறுப்பினரின் பதவிக்காலத்தின் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்கு பதவி வகிப்பதற்கு நியமிக்கப்படுதல் வேண்டும்.

## பாகம் V

### மேன்முறையீட்டு நடவடிக்கைமுறை

7\. (1) தெரிவுக்குழுவின் முடிபினால் இன்னலுற்ற எவரேனும் ஆள், சட்டத்தின் 11 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல் வெளியிடப்பட்ட திகதியிலிருந்து பத்து நாட்களினுள், அப்பிரிவின் நியதிகளின்படி ஆட்சேபனைகளை அல்லது உரிமைக்கோரிக்கைகளை இதற்கான அட்டவணை III இல் குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் பொருளளவில் ஆணையாளருக்கு சமர்ப்பிக்கலாம்.

(2) ஆணையாளர், அத்தகைய ஆட்சேபனைகளை அல்லது உரிமைக்கோரிக்கைகளை, அவற்றின் விசாரணைக்காக அல்லது புலனாய்வுக்காக அத்தகைய ஆட்சேபனைகள் அல்லது உரிமைக் கோரிக்கைகள் பெறப்பட்ட திகதியிலிருந்து பத்து வாரங்களினுள் 6 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் நியமிக்கப்பட்ட இயைபான மேன்முறையீட்டுக் குழுவுக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

(3) ஒவ்வொரு மேன்முறையீட்டுக் குழுவும் அத்தகைய விசாரணைகளையும் புலனாய்வுகளையும் நடாத்துதல் வேண்டும் என்பதுடன் இயைபான பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளரின் உதவியுடன் (2) ஆம் உப ஒழுங்குவிதியின் கீழ் மேன்முறையீட்டுக் குழுவினால் பெறப்பட்ட தகவல்களை சரிபார்த்தலும் வேண்டும்; அத்துடன் அதன் முடிபை சட்டத்தின் 12 ஆம் பிரிவின் நியதிகளின்படி ஆணையாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

(4) இயைபான பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர், இலத்திரனியல் பதிவேடுகள் மற்றும் இலத்திரனியல் ஆவணங்கள் சார்பில் 2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் நியதிகளின்படி அவ்விலத்திரனியல் பதிவேடுகள் மற்றும் இலத்திரனியல் ஆவணங்கள் உட்பட ஏதேனும் மேன்முறையிட்டுக் குழுவினால் நடாத்தப்பட்ட விசாரணைகள் மற்றும் புலனாய்வுகளின் பதிவேடுகள் மற்றும் அவற்றின் மீதான முடிபுகளை இயைபான பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலகத்தில் அமையப்பெற்றுள்ள நலன்புரி பயனுகரி தகவல் அலகில் பேணப்படுவதைச் செய்வித்தல் வேண்டும்.

(5) ஆணையாளர், (3) ஆம் உப ஒழுங்குவிதியில் குறிப்பீடு செய்யப்பட்ட அறிவித்தலைப் பெற்றதிலிருந்து இரண்டு வாரங்களினுள் ஆட்சேபனை அல்லது உரிமைக் கோரிக்கையின் மீதான சபையின் முடிபை, அதனைச் சமர்ப்பித்த ஆளுக்கு அறிவித்தல் வேண்டும்.

8. இவ்வொழுங்குவிதிகளில் -

"சட்டம்" என்பது, 2022 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, நலன்புரி அனுகூலங்கள் சட்டம் எனப் பொருள்படும்;

"சபை" என்பது, 2022 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க நலன்புரி அனுகூலங்கள் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட நலன்புரி அனுகூலங்க்ள சபை எனப் பொருள்படும்;

"ஆணையாளர்" என்பது, 2022 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, நலன்புரி அனுகூலங்கள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட நலன்புரி அனுகூலங்கள் ஆணையாளர் எனப் பொருள்படும்;

"மாவட்டச் செயலாளர்" என்பது, நிருவாக மாவட்டமொன்று தொடர்பில் அரசாங்கத்தினால் அந்நிருவாக மாவட்டத்துக்காக நியமிக்கப்படும் மாவட்டச் செயலாளர் எனப் பொருள்படும்;

"பிரதேச செயலகம்", "பிரதேச செயலாளர் பிரிவு" மற்றும் "பிரதேச செயலாளர்" என்பவை, 1992 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க, தத்துவங்கள் கைமாற்றல் (பொரும்பாகச் செயலாளர்கள்) சட்டத்தில் உள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"இலத்திரனியல்" என்பது, 2016 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் கீழ் அச்சொல்லமைப்புக்கு குறித்தளிக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் "இலத்திரனியல்ரீதியில்" என்னும் சொல்லமைப்பு அதற்கிணங்க பொருளமைத்துக் கொள்ளப்படுதலும் வேண்டும்;

"அரச சார்பற்ற ஒழுங்கமைப்பு" என்பது, 1980 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, வலிந்துதவு சமூகசேவை ஒழுங்கமைப்புகள் (பதிவு செய்தலும் மேற்பார்வை செய்தலும்) சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட ஏதேனும் ஒழுங்கமைப்பு எனப் பொருள்படும்.

**அட்டவணை** [ஒழுங்குவிதிகள் 2(1)]

### தெரிவு செய்வதற்கான கட்டளைக்கல் நலன்புரி நன்மைக் கொடுப்பனவுகளைப் பெறுவதற்குத் தகுதியான நபர்களை / குடும்பங்களை தெரிவு செய்தல்

### பொதுக் கட்டளைக்கல் மற்றும் தெரிவு செய்வதற்கான சுட்டிகள்

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களை இனங்காண்பதற்கான செயன்முறையானது ஆறு அளவுகோல்களையும் ஒவ்வொரு அளவுகோலும் குறித்த சுட்டிகளைப் பயன்படுத்தி அளவீடு செய்கின்ற அளவுகளையும் கொண்டுள்ளன. (பகுதி I) ஒவ்வொரு விண்ணப்பதாரியும் ஆகக்கூடியது 100 சதவீத புள்ளிகளைப் பெறுவதுடன் ஒவ்வொரு சுட்டியின் அளவீடும் தொகை மதிப்பீட்டு மற்றும் புள்ளிவரத் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட குடும்ப வருமான மற்றும் செலவின ஆய்வினை (Household Income and Expenditure Survey - HIES) அடிப்படையாகக் கொண்ட குறித்த சுட்டி தொடர்பான வறிய குடும்பங்களின் எண்ணிக்கையினைக் கணிப்பிட செய்கின்றது. சுட்டிகளின் வெட்டுப்புள்ளி கணிப்பீட்டு முறைமையானது பகுதி II இல் தரப்பட்டுள்ளதுடன் விலகல் புள்ளிகளை கணிப்பிடுவதற்கான சூத்திரம் பகுதி III இல் தரப்பபட்டுள்ளது பகுதி IV ஆனது நான்கு நிகழ்ச்சித் திட்டங்களுக்குமான கொடுப்பனவுத் திட்டங்களாகும். பகுதி I இல் தரப்பட்டுள்ள அளவுகோல் மற்றும் சுட்டிகளின் பட்டியல் பின்வருமாறு:-

### பகுதி I

### பரிமாணங்கள் மற்றும் சுட்டிகளின் நிரல்கள்

| *பரிமாணங்கள்* | | *சுட்டிகள்* |
|---|---|---|
| 01. கல்வி | i. | குடும்ப உறுப்பினர்களின் கல்வி மட்டம் |
| | ii. | 5 – 16 வயதுகளுக்கிடைப்பட்ட பாடசாலை செல்லாத சிறுவர்களின் எண்ணிக்கை |
| 02. சுகாதாரம் | i. | நீண்டகால நோய்களினால் பாதிக்கப்பட்டுள்ள குடும்ப உறுப்பினர்கள் |
| | ii. | அங்கவீனமுற்ற குடும்ப உறுப்பினர்கள் |
| 03. பொருளாதார மட்டம் | i. | மாதாந்த தலைக்குரிய செலவினம் |
| | ii. | மாதாந்த தலைக்குரிய வருமானம் |
| | iii. | மாதமொன்றுக்கு 60 அலகுகளை விடக் குறைவான மின்சாரப் பாவனை |
| 04. சொத்து | i. | குடும்ப உறுப்பினருக்கு வாழுகின்ற வீடு மற்றும் காணி உரிமை இல்லாதிருத்தல் |
| | ii. | குடும்ப உறுப்பினருக்கு ஏனைய வீட்டு உரிமை அல்லது கட்டிடமொன்று இல்லாதிருத்தல் |
| | iii. | குடும்பத்திற்கு ஆகக் குறைந்தது 0.5 ஏக்கர் பயிர்ச்செய்கை மேட்டுநிலம் காணப்படாமை |
| | iv. | குடும்பத்திற்கு ஆகக் குறைந்தது ஒரு ஏக்கர் நெற்செய்கை நிலம் காணப்படாமை |
| | v. | போக்குவரத்துச் சாதனமாக (மோட்டார் சைக்கிள் CC$\geq$125, முச்சக்கர வண்டி, கார், வான், ஜீப், பஸ், லொறி, ரிப்பர், கை டிரக்டர் (2 சில்லு), டிரக்டர் (4 சில்லு), என்பனவற்றில் சொத்தாக ஒன்றையேனும் கொண்டிராதிருத்தல். |
| | vi. | பொருளாதாரம் சார்பாக ஆகக் குறைந்த ஒரு சொத்தாகக் (மீன்பிடிப் படகு, இணைந்த அறுவடை இயந்திரம், சூட்டித்தல் இயந்திரம்) ஒன்றேனும் கொண்டிராதிருத்தல். |
| | vii. | வாழ்வாதாரம் சார்பாக ஆகக் குறைந்தது ஒரு சொத்தாக (கறவைப் பசு 05, ஆடுகள் 20, கோழி 50, வாத்து 20, தாரா 10) எவற்றையேனும் கொண்டிராதிருத்தல் |
| 05. வீடமைப்பு நிருமாணம் | i. | லைன் அறை/வரிசை வீடு/முடுக்கு/மடுவம் அல்லது ஏனையவற்றில் வாழ்தல் |
| | ii. | நிரந்தர சுவர், நிரந்தர தரை, நிரந்தர கூரையினைக் கொண்ட வாழ்விடம் ஒன்றினைக் கொண்டிராதிருத்தல் |
| | iii. | 500 சதுர அடிக்கு குறைவான மொத்தத் தரைப் பிரதேசம் |
| | iv. | சுத்தமான குடிநீர் வசதி காணப்படாமை |

v. போதிய சுகாதாரவேற்பாட்டு வசதி காணப்படாமை

vi. போதிய சுகாதாரவேற்பாட்டு வசதி காணப்படாமை

vii. மின்சார இணைப்புக்கான வசதி காணப்படாமை

06. குடும்ப மக்கள் தொகை

i. தங்கிவாழும் விகிதம் (0 - 14) வயது வரையானவர்களினதும் மற்றும் 65 வயதுடையவர்களினதும் மெத்த எண்ணிக்கையின் கீழ் 15 - 64 வயதானவர்களினதும் எண்ணிக்கை) 0.64 சதவீதத்திற்கு அதிகமாக காணப்படுதல்

ii. ஒற்றைப் பெற்றோர் குடும்பம்

## பகுதி II

### கணிப்பீட்டு முறைமை

### சுட்டிகள் மற்றும் சுட்டி வெட்டுப்புள்ளி

1. கல்வி

i. குடும்ப உறுப்பினர்களின் உயர்ந்த கல்வி மட்டம்

க.பொ.த. சாதாரண தரம் அல்லது உயர்வான சித்தியைக் கொண்டிருத்தல் → வறுமை இல்லை (0)
க. பொ. த. சாதாரண தரத்திற்கு கீழான நிலை → வறுமை (1)

அதிகூடிய கல்வி மட்டம் க.பொ.த சாதாரண தர சித்தியாக இருப்பின் அல்லது அதற்கு உயர்வான மட்டமாக இருப்பின் "வறுமையற்றதாக" கருதப்படுவதுடன் உயர்கல்வி மட்டம் 10 ஆம் வகுப்பு சித்தி அல்லது அதனை விடக் குறைவான மட்டங்கள், விசேட கல்வி, பாடசாலைக்கு ஒரு போதும் செல்லாமை என்பன "வறுமை" எனக் கருதப்படும்.

ii. பாடசாலை செல்லும் வயதிலுள்ள (5-16 வயது) சகல குடும்ப உறுப்பினர்களும் மற்றும் தற்பொழுது பாடசாலைக்கு செல்பவர்களும்

உறுப்பினர் (5-16 வயது) தற்பொழுது பாடசாலைக்கு சமூகமளிப்பதுடன் ஏனைய கல்வி நிறுவனங்களுக்கும் செல்கின்றனர் → வறுமை இல்லை (0)

உறுப்பினர் (5-16) வயது) தற்பொழுது பாடசாலைக்கோ அல்லது வேறு கல்வி நிறுவனங்களுக்கோ செல்வதில்லை → வறுமை (1)

பாடசாலை செல்லும் வயதில் (5-16 வயது) குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் பாடசாலைக்கு செல்வார்களாயின் வறுமை இல்லை எனக் கருதப்படுவதுடன் பாடசாலை செல்லும் வயதில் (5-16 வயது) பாடசாலை செல்லவில்லையாயின் வறுமையாகக் கருதப்படும்

2. சுகாதாரம்

i. நீண்டகால (கடுமையான) நோய்க்கு ஆளானதொரு குடும்ப உறுப்பினர் இருத்தல்

நீண்டகால (கடுமையான) நோய் - இல்லை → வறுமை இல்லை (0)
நீண்டகால (கடுமையான) நோய் - ஆம் → வறுமை (1)

மாரடைப்பு, பக்கவாதம், நீரிழிவு நோய், உயர் இரத்த அழுத்தம், சிறுநீரக நோய், மனநோய் அல்லது வேறேதேனும் நீண்டகால (கடுமையான) நோயினால் குடும்பத்தில் ஒருவரும் பாதிக்கப்படாத போது வறுமையானதாகக் கருதப்பட மாட்டாது என்பதுடன் மேற்குறித்த நோயினால் குடும்பத்தில் ஒருவரேனும் பாதிக்கப்பட்டிருப்பின் அது வறுமையாகக் கருதப்படும்

ii. *அங்கவீனமுடைய குடும்ப உறுப்பினர்*
*அங்கவீனம் - இல்லை → வறுமை இல்லை*
*அங்கவீனம் - ஆம் → வறுமை (1)*

குடும்ப உறுப்பினர்கள் அங்கவீனரல்லாத போது அவர்கள் வறியவர்களாகக் கருதப்படமாட்டார்கள் என்பதுடன் குடும்ப உறுப்பினர் யாராவது அங்கவீனமாகக் காணப்படும்போது அக் குடும்பம் வறுமையாகக் கருதப்படும்

*3.* பொருளாதார மட்டம்

i. *தலைக்குரிய செலவினம்*

*மாதாந்த தலைக்குரிய செலவினம் ≥ வெட்டுப்புள்ளி → வறுமை இல்லை (0)*
*மாதாந்த தலைக்குரிய செலவினம் < வெட்டுப்புள்ளி → வறுமை (1)*

வெட்டுப்புள்ளியானது மாதாந்த தலைக்குரிய செலவினத்திற்கு சமனாக அல்லது அதற்கு மேலாக இருப்பின் அது வறுமையாக கருதப்படமாட்டாது மேலும் மாதாந்த தலைக்குரிய செலவினமானது வெட்டுப்புள்ளிக்குக் கீழாக இருப்பின் அது வறுமையாகக் குறிப்பிடப்படும்

ii. *மாதாந்த தலைக்குரிய வருமானம்*

*மாதாந்த தலைக்குரிய வருமானம் ≥ வெட்டுப்புள்ளி வறுமை → இல்லை (0)*
*மாதாந்த தலைக்குரிய வருமானம் < வெட்டுப்புள்ளி → வறுமை (1)*

வெட்டுப்புள்ளியானது மாதாந்த தலைக்குரிய வருமானத்திற்கு சமனாக அல்லது அதற்கு மேலாக இருப்பின் அது வறுமையாக கருதப்படமாட்டாது மேலும் மாதாந்த தலைக்குதிய வருமானமானது வெட்டுப்புள்ளிக்குக் கீழான இருப்பின் அது வறுமையாக குறிப்பிடப்படும்

*குறிப்பு* : வெட்டுப்புள்ளியானது தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தினால் வெளியிடப்படும் உத்தியோகபூர்வ வறுமைக்கோட்டின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும்.

iii. *மின்சார நுகர்வு*

*சராசரி மாதாந்த மின்சார நுகர்வு ≥ 60kWh → வறுமை இல்லை (0)*
*சராசரி மாதாந்த மின்சார நுகர்வு < 60kWh → வறுமை (1)*

*சராசரி மாதாந்த மின்சார நுகர்வு 60 kWh அல்லது அதற்கு அதிகமாயின் வறுமையெனக்கருதப்படமாட்டாது. சராசரி மின்சார நுகர்வு 60kWh இற்கு குறைவாயின் வறுமையெனக் எனக் குறிப்பிடப்படும்.*

*4.* சொத்துக்கள்

i. குடும்ப உறுப்பினர்/உறுப்பினர்கள் வசிக்கும் வீட்டுடனான காணியின் உரிமை

*உரிமையானது → வறுமை இல்லை (0)*
*உரிமையற்றது → வறுமை (1)*

வகிக்கும் வீட்டுடனான காணியின் உரிமை குடும்ப உறுப்பினருக்குக்/உறுப்பினர்களுக்குக் காணப்படுமாயின் வறுமை யெனக் கருதப்படமாட்டாது. உரிமையில்லாத போது வறுமையெனக் கருதப்படும்

ii. வேறு வீடுகள்/கட்டிடங்கள் குடும்ப உறுப்பினருக்கு /உறுப்பினர்களுக்கு உரிமையுடையதாக இருத்தல்

*உரிமையானது → வறுமை இல்லை (0)*
*உரிமையற்றது → வறுமை (1)*
குடும்ப உறுப்பினருக்கு/ உறுப்பினர்களுக்கு வேறு வீடுகள்/ கட்டிடங்கள் பொறுப்பில் இருப்பின் வறுமையாகக் கருதப்படமாட்டாது வேறு வீடுகள்/கட்டிடங்கள் பொறுப்பில் இல்லாதபோது வறுமையாகக் கருதப்படும்.

iii. குடும்ப உறுப்பினர்/உறுப்பினர்களின் மேட்டு நிலத்திற்கான உரிமை 0.5 ஏக்கருக்கு சமனாக அல்லது அதனைவிட அதிகமாக காணப்படுதல்.

உரிமையானது (0.5 ஏக்கர் அல்லது கூடியது) → வறுமை இல்லை (0)
உரிமையானது (0.5 ஏக்கரை விடக் குறைசானது) → வறுமை (1)

குடும்பமொன்றின் பொறுப்பில் உள்ள அனைத்து மேட்டு நிலங்களும் 1/2 ஏக்கருக்கு அல்லது அதனை விட அதிகமாயின் வறுமையாகக் கருதப்படமாட்டாது. ஏதேனும் மேட்டு நிலத்தை கொண்டிராதபோதும் அல்லது அனைத்து மேட்டு நிலங்களும் 1/2 ஏக்கரை விட குறைவாகக் காணப்படுமாயின் வறுமையாகக் கருதப்படும்.

iv. குடும்ப உறுப்பினர்/உறுப்பினர்களுக்கு சொந்தமான நெற் காணி 1 ஏக்கருக்கு அல்லது அதனைவிட அதிகமாக காணப்படல்.

உரிமையானது ≥ ஒரு ஏக்கர் → வறுமை இல்லை (0)
உரிமையானது < ஒரு ஏக்கர் → வறுமை (1)

குடும்ப உறுப்பினர்/உறுப்பினர்களுக்கு பொறுப்பில் உள்ள நெற் காணி 1 ஏக்கருக்கு அல்லது அதனைவிட அதிகமாகக் காணப்படுமாயின் வறுமையாகக் கருதப்படமாட்டாது. 1 ஏக்கரைவிடக் குறைவாக அனைத்து நெற் காணிகளும் காணப்படுமாயின் வறுமையாகக் கருதப்படும்.

v. சொந்தமாக ஆகக்குறைந்தது மோட்டார் சைக்கிள் ≥ CC 125, முச்சக்கர வண்டி, கார், வான்/ஜீப், பஸ், லொறி/ரிப்பர், இரண்டு சக்கர டிரக்டர், டிரக்டர் (4 சில்லு), போன்ற வாகனங்களில் ஏதாவது ஒன்றையேனும் கொண்டிருத்தல்

உரிமையானது → வறுமை இல்லை (0)
உரிமையற்றது → வறுமை (1)

vi. தொழில்நுட்பம்/தொழில்நுட்பமல்லாத மீன்பிடிப் படகுகள், இணைந்த அறுவடை இயந்திரம், நெல் அறுவடை/கிளை நறுக்கும் இயந்திரம் என்பனவற்றில் ஏதாவது ஒன்றையேனும் கொண்டிருத்தல்

உரிமையானது → வறுமை இல்லை (0)
உரிமையற்றது → வறுமை (1)

vii. பால் கறவைப் பசு 5, ஆடுகள் 20, கோழி 50, வாத்து 50, தாரா 10 அல்லது அதிக எண்ணிக்கையிலான சிறிய கால்நடைகள் போன்ற வாழ்வாதாரத்திற்கான கால்நடைகளில் ஆகக் குறைந்தது ஒரு தொகுதியைக் கொண்டிருத்தல்.

உரிமையானது → வறுமை இல்லை (0)
உரிமையற்றது → வறுமை (1)

5. வீடமைப்பு நீர்மாணம்

i. வீட்டு அலகின் தன்மை

வீட்டு அலகின் தன்மை *.......→ வறுமை இல்லை.
வீட்டு அலகின் தன்மை ** .......→ வறுமை (1)

*வீட்டின் தன்மை தனி வீடாக இருத்தல் (ஒரு மாடி) தனி வீடுகள் (2 மாடிகள்), தனி வீடு (2 மாடிகளுக்கு அதிகமானது) இணைந்த வீடுகள் /தொடர் மாடிகள், ஆடம்பர வீடுகள், இரட்டை வீடுகள் என்பன வறுமையற்றதாகக் கருதப்படும்.

**வீட்டின் தன்மை லைன் வீடுகள் /லைன் அறைகள், சேரிகள், குடிசைகள் அல்லது ஏனைய வகையான விடுகளாக இருப்பின் வறுமையானதாகக் கருதப்படும்.

ii. வீடு கட்டுவதற்கு பயன்படுத்தப்பட்ட பிரதான மூலப் பொருட்கள்
அ. சுவர் கட்டுவதற்கு பயன்படுத்தப்பட்ட பிரதான மூலப் பொருட்கள்

*சுவர்கள் *நிரந்தர மூலப் பொருட்கள் → வறுமை இல்லை (0)*
*சுவர்கள் **பகுதியளவு நிரந்தர மூலப் பொருட்கள் → வறுமை (1)*

*செங்கல், களிமண், சீமெந்துக் கல், பாறைக்கல், களிகள், பயன்படுத்தி சுவர் அமைக்கப்பட்டது.

**களிமண். பலகை /தகரம், தென்னை/பனை ஓலைகள் மற்றும் ஏனைய இவை போன்ற மூலப் பொருட்கள் பகுதியளவு நிரந்தர மூலப் பொருட்களாகும்.

ஆ. தரைக்குப் பயன்படுத்தப்பட்ட பிரதான மூலப் பொருட்கள்
தரை - நிரந்தர மூலப் பொருட்கள் * .......... → வறுமை இல்லை (0)
தரை - பகுதியளவு நிரந்தர மூலப் பொருட்கள் ** ...... → வறுமை (1)

* தரைக்கு பயன்படுத்தப்பட்டிருப்பது சீமெந்து, ரெராசோ/போர்சலின் ஓடுகள், கொங்கிறீட் ஆயின் அவை நிரந்தர மூலப் பொருட்களாகும்

** களி, பலகை, மணல் மற்றும் அவை போன்ற பொருட்கள் பகுதியளவு நிரந்தர மூலப் பொருட்களாகும்

இ. கூரைக்குப் பயன்படுத்தப்பட்ட மூலப் பொருட்கள்

கூரை - நிரந்தர மூலப் பொருட்கள் * .......... → வறுமை இல்லை (0)
கூரை - பகுதியளவு நிரந்தர மூலப் பொருட்கள் ** .......... → வறுமை (1)

* கூரை ஓடுகள், அஸ்பெஸ்ரஸ், கொங்கிறீட், அலுமினியம் கலந்த தகடுகள் கூரைக்குப் பயன்படுத்தப்படுமாயின் அவை நிரந்தர மூலப் பொருட்களாகும்.

** தகரம், தென்னை/பனை ஓலைகள்/வைக்கோல் அல்லது அவை போன்ற ஏனைய மூலப் பொருட்கள் பகுதியளவு நிரந்தர மூலப் பொருட்களாகக் கருதப்படும்.

சுவர், தரை மற்றும் கூரை என்பவற்றின் மூலப் பொருட்கள் பகுதியளவு நிரந்தர மூலப் பொருட்களால் ஆக்கப்பட்டிருப்பின் அவை வறுமையற்றது எனக் கருதப்படுவதுடன் மேற்படி தேவைக்காக பயன்படுத்தப்பட்டவை பகுதியளவானதாகக் காணப்படுமாயின் அவை வறுமையானதாகக் கருதப்படும்

iii. தரைப் பரப்பு

தரைப் பரப்பு 500 சதுர அடி அல்லது அதற்கு அதிகமாயின் * .......... → வறுமை இல்லை (0)
தரைப் பரப்பு 500 சதுர அடிக்கு குறைவாயின் * .......... → வறுமை (1)

* தரை பரப்பு 500 சதுர அடி அல்லது 500 சதுர அடிக்கு அதிகமாயின் வறுமையற்றதாக கருதப்படும்.

** தரைப் பரப்பு 500 சதுர அடிக்கு குறைவாயின் வறுமையகக் கருதப்படும்.

iv. குடிநீர் பெறும் பிரதான மூலம்
குடிநீரின் பிரதான மூலம் - பாதுகாப்பானது * ..........→ வறுமை இல்லை (0)
குடிநீரின் பிரதான மூலம் - பாதுகாப்பற்றது * * .............→ வறுமை (1)

பாதுகாக்கப்பட்ட கிணறு எனின் குடிநீர் பிரதான மூலம் பாதுகாப்பானது குழாய் நீரானது (தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்பு/சமூகமட்ட நீர் வழங்கல்/உள்ளூராட்சியமைப்புகள் /தனியார் நீர் கருத்திட்டங்கள்), சுழு வடிகட்டப்பட்ட நீர் குளாய்க் கிணறு, போத்தல் நீர் என்பனவாயின் அக் குடும்பம் வறுமையற்றதாகக் கருதப்படும்.

குடிநீரின் பிரதான மூலம் பாதுகாப்பற்றதாயின் அவையாவன பாதுகாப்பற்ற கிணறு, பௌசர் மூலம் விநியோகிக்கப்படும் சுழு வடிகட்டப்படாத நீர்/குளங்கள்/ஆறுகள்/நதிகள்/ஊற்றுகள்/மழை நீர், அல்லது ஏனைய இவை போன்ற பாதுகாப்பற்ற நீர் மூலங்கள் வறுமையானதாகக் கருதப்படும்.

எ. மலசலகூட வசதிகள்
மலசலகூட வசதிகள் *.......... → வறுமை இல்லை (0)
மலசலகூட வசதிகள் **.......... → வறுமை (1)

*மேம்படுத்தப்பட்ட (நீர் அடைப்பு) மலசலகூட வசதி குடும்பத்தின் தனிப்பட்ட பாவனைக்காக இருக்கும் போது அக் குடும்பம் வறுமையற்றதாகக் குறிக்கப்படும்.*

*மேம்படுத்தப்படாத மலசலகூடம் அல்லது (நீர் அடைப்பற்ற) அல்லது அது வேறு ஒரு குடும்பத்துடன் அல்லது குடும்பங்களுடன் பகிரப்படல், பொது மலசலகூடங்களைப் பயன்படுத்தல் போன்றவையாயின் அக் குடும்பம் வறுமையானதாகக் குறிக்கப்படும்.*

vi. *ஒளியூட்டலின் பிரதான மூலம்*

*ஒளியூட்டல் *.......... → வறுமை இல்லை (0)*
*ஒளியூட்டல் **.......... → வறுமை (1)*

*ஒளியூட்டலின் பிரதான மூலம் மின்சாரம், சூரிய சக்தி, மின்பிறப்பாக்கி/பற்றரி, உயிரியல் வாயு என்பனவாயின் அக் குடும்பம் வறுமையற்றதாகக் கருதப்படும்.*

*ஒளியூட்டலுக்கான பிரதான மூலம் மண்ணெண்ணெய் அல்லது அதையொத்த ஏனைய மூலங்களாயின் அக் குடும்பம் வறுமையானதாகக் கருதப்படும்.*

6. *குடும்ப மக்கள் தொகை.*

i. *தங்கிவாழும் விகிதம்.*

$$\frac{\text{வயது 0-14 வரையிலரனவர்களினதும், வயது 65ம் மற்றும் அதற்கு மேற்பட்டடவர்களினதும் எண்ணிக்கை,}}{\text{வயது 15-64 வரையிலானவர்களின் எண்ணிக்கை.}}$$

*தரப்பட்ட வெட்டடுப்புள்ளிக்குக் குறைவானது .......... → வறுமை இல்லை (0)*
*தங்கிவாழும் விகிதம் தரப்பட்ட வெட்டடுப்புள்ளிக்கு அதிகமானது .......... → வறுமை (1)*

*கிடைக்கப் பெறும் தங்கிவாழும் விகிதத்தின் அளவு வெட்டுப்புள்ளிக்கு சமனாகவோ அல்லது அதிகமாகவோ இருப்பின் வறுமையாகக் கொள்ளப்படும். கிடைக்கப் பெறும் தங்கிவாழும் விகிதத்தின் அளவு குறைவாக இருப்பின் வறுமையாகக் கொள்ளப்படமாட்டாது.*

ii. *தாய் அல்லது தந்யை மட்டும் உள்ள குடும்பம்.*

*திருமண நிலை - பெற்றோர் இருவரும் வாழ்ந்தால் .......... → வறுமை இல்லை (0)*
*திருமண நிலை - பெற்றோரில் ஒருவர் வாழ்ந்தால் .......... → வறுமை (1)*

*தாய் அல்லது தந்தை மட்டும் உள்ள குடும்பம் வறுமையானதாகக் கருதப்படும்*

*குறிப்பு : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் அண்மையில் நடாத்தப்பட்ட குடித்தன வருமான செலவு அளவீடு (HIES) இனைப் பயன்படுத்தித் தலைக்கான செலவினப் பெறுமானத்தினைக் கருத்திற் கொண்டு குடிசனத்தொகையின் வறுமையானவர்களில் 40% மிக வறுமைக்குரியதன் வெட்டுப்புள்ளியாகத் தீர்மானிக்கப்படுகிறது.*

## *பகுதி* III

**வறுமைநிலைப் புள்ளி வழங்குவது தொடர்பாக தனிப்பட்ட ஒருவரின் பற்றாக்குறைப் புள்ளி கணிக்க மூன்று கட்டங்களாகச் செய்யப்படுகிறது.**

01. *பற்றாக்குறைச் சுட்டியினை கணிப்பீடு செய்தல்.*
02. *சுட்டிகளுக்கான நிறையினை கணிப்பீடு செய்தல்.*
03. *தனிப்பட்ட ஒருவருக்கான நிறையிடப்பட்ட பற்றாக்குறைப் புள்ளிக் கணிப்பீடு செய்தல்.*

*தனிப்பட்டவரான* i *தனது சுட்டி* j *யினைக் கொண்டிருப்பவராயின் அவர் / அவள் இன் பற்றாக்குறைச் சுட்டியை பின்வரும் சமன்பாட்டினைப் பயன்படுத்திக் கணிப்பீடு செய்ய முடியும்.*

xj (i) என்பது j சுட்டியின் மீதான தனிப்பட்ட பெறுமதியாகும்.

ஆயின்,

$\mu j(\mathrm{i}) = \mathrm{j}$ தனிப்பட்டவரின் சுட்டி j இல் பற்றாக்குறைக்குள்ளாகியிருப்பார்

$\mu j(\mathrm{i}) = 0$ தனிப்பட்டவரின் சுட்டி j இல் பற்றாக்குறைக்குள்ளாகியிருக்கமாட்டார்

***நிறை தொழிற்பாட்டிற்கான சூத்திரம்***

